செய்தி வெளியீடு எண்.77 நாள்.15.07.2021

<u>மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைஅறிவிப்பு</u>

<u>மீன்வள உதவியாளர் பணியிடம் நிரப்புதல்</u>

தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் சென்னைமண்டல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் சேத்பட்டு ஆய்வக அலுவலகத்தில் காலியாக உள்ள ஒரு மீன்வளஉதவியாளர் பணியிடத்தை பொதுப்போட்டி (முன்னுரிமைபெற்றவர்) பிரிவில் கீழ்காணும் தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

## <u>தகுதிகள்</u>

1. தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்
2. நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். மீன்பிடித்தல், வலை பின்னுதல் மற்றும் அறுந்த வலைகளை பழுதுபார்க்க தெரிந்திருக்க வேண்டும். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையினரால் நடத்தப்படும் ஏதேனும் ஒரு மீனவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் .
3. வயது வரம்பு 30 வயதிற்குட்பட்ட பொதுப்பிரிவு (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 35 வயதுவரை)

விருப்பமுள்ள நபர்கள் 02–08–2021 மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்து விண்ணப்பத்தினை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
இணை இயக்குநர் (மண்டலம்)
சென்னைஅலுவலகம்,
D.M.S வளாகம் மூன்றாம் தளம்,
தேனாம்பேட்டை, சென்னை–600 006.
தொலைபேசி எண்.044 24328596.

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01